SRKAY PHYSIOTHERAPY & FITNESS CLINIC
Dr. S. Rajakamal
MPT., MIAP., PGDOSIM., MSC YTVHS
28, Balakrishna Road, Mylapore, Chennai - 600 004.
9791137744
9176455536
Email : srkayphysiotherapy@gmail.com

# EXPRESS VELACHERY

Neighbourhood Newspaper – Weekly

*Free Circulation*

Chennai Mehandi Studio
We bring Prosperity & Positivity
Prakashini
Ceo & Creative Head
Contact
8012307693
9087771000

VOL - 4 ISSUE - 2 Editorial : 044-42077328 / 7305837388 email : expressvelachery@gmail.com

## வேளச்சேரியில் மழைநீர் வடிகால் மூடி சேதத்தினால் விபத்து அபாயம்...



அடையாறு மண்டலம், 175வது வார்டு, வேளச்சேரி, வீட்டுவசதி வாரிய குடியிருப்பு வளாகத்தில் ஒரு கழிவு நீர் வெளியேற்று நிலையம் உள்ளது. இதன் முகப்பு பகுதியில், மழைநீர் வடிகால் செல்கிறது. இதில், உள்ள தூர்வாரும் துளை மூடி உள்வாங்கி சேதமடைந்து உள்ளது. சில நேரம், கழிவு நீர் வெளியேற்று நிலையத்தில் இருந்து, குழாய் வழியாக, கழிவு நீர் இந்த வடிகாலில் விடப்படும். இதற்கு வசதியாக, வடிகால் மூடியை சேதப்படுத்தி உள்ளனர். இரவு நேரத்தில் அந்த பகுதி வழியாக செல்பவர்கள், சேதமடைந்த மூடி பள்ளத்தில் விழுந்து காயமடைகின்றனர். பெரிய அளவில் அசம்பாவிதம் நடைபெறாத வகையில், வடிகால் மூடியை அதிகாரிகள் உடனடியாக சீரமைக்க வேண்டும் என கோரிக்கை எழுந்துள்ளது.

## தெருவிளக்கு இல்லாததால் இரவில் பயன்படாத சாலை...

சென்னை வேளச்சேரி - தரமணி ரயில்வே சாலை, கடந்த வாரம் திறப்பு விழா இன்றி பயன்பாட்டுக்கு திறந்து விடப்பட்டது. ஆதம்பாக்கம், பழவந்தாங்கல், உள்ளகரம், வேளச்சேரியிலிருந்து, இந்த சாலை வழியாக தரமணி, திருவான்மியூர் பகுதிக்கு துரிதமாக செல்ல முடியும்.

சாலை திறந்தபோது, தெருவிளக்கு அமைக்கவில்லை. அதன் பிறகு, தற்போது வரை இங்கு தெருவிளக்குகள் அமைக்கப்படவில்லை. இதனால், இரவில் இந்த சாலையை பயன்படுத்த முடியவில்லை. பகலில் தனியாக செல்லும் பெண்கள், இரவில் செல்ல



அச்சப்படுகின்றனர்.

துரித பயணத்திற்காக சாலை திறந்தும், அதை முழுமையாக பயன்படுத்த முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. அனைத்து தரப்பினரும், இரவில் சுதந்திரமாக செல்லும் வகையில், தெரு விளக்கு அமைக்க ரயில்வே நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## Soon, Rs 200 crore for restoration of Pallikaranai...

**CHENNAI:** The Union environment ministry has approved Tamil Nadu's proposal to get financial support from the Green Climate Fund (GCF) to restore Pallikaranai marshland in Chennai. The GCF is a new global fund created by the United Nations Framework Convention on Climate Change to support developing countries' efforts in combating climate change.

Supriya Sahu, Additional Chief Secretary, Department of Environment, Climate Change and Forests, confirmed to TNIE that the State government received a no-objection letter from the Union government. "As per the procedure, we submit a proposal, which is vetted by an accredited agency, to the Union ministry. It then examines it and gives a no-objection letter for the State to forward the proposal to GCF. Our proposal was vetted by the National Bank for Agriculture and Rural Development, and has now been sent to GCF."

Sahu said the government would receive little over Rs 200 crore, which will be used for scientific eco-restoration of Pallikaranai marshland, which is key for the city's overall well being - be it groundwater recharge or flood mitigation. "The proposal includes removal of invasive and introduction of natives species; plugging of sewage inlets; and initiating measures to declare the marsh land as a bird sanctuary and Ramsar Site."

Environment Minister Meyyanathan Siva V told TNIE the government is committed to protect all important wetlands in the State. "Chief Minister MK Stalin launched the Tamil Nadu Wetlands Mission precisely for this. To restore Pallikaranai marshland, the biggest challenge is the dumpyard. The land it's on will be retrieved and handed



to the forest department. Like wise, we plan to clear legacy waste in 143 dumpyards across the State and restore the areas.

According to research done by the Care Earth Trust in 1991, the Pallikaranai marsh covered 2,450 ha in 1991, but by 2015, it lost out to various developments, including a railway line, and covered just 600 ha. Despite its reduced area, the marsh acts as a sponge that stores the heavy monsoon rains and releases water in the dry months.

Last year, the Madras High Court ordered the environment and forest department to prevent non-forest activities in the marsh land. It also passed an order to relocate the dumpyards in the marsh, and told the government to reclaim unutilised land allotted to government industries and institutions.

# CLASSIFIED

## WANTED
Front Desk Executive
(Male / Female)
Ateliers Fitness
Velachery, Behind A2b
Contact
9841030772

---

INCOME TAX / GST RETURNS, ROC ANNUAL COMPLIANCE / COMPANY INCORP / PF-ESIC eTDS / TRADEMARK REGN / DSC
ASHARAJ BUSINESS CONSULTANTS
CMA.T.RAJKUMAR JAIN
99401 11431
Email:cmarajkumar@gmail.com

---

Commercial Space for Rent
*Velachery Main Road*
*Opp to Chennai Silks*
850 sq. ft. New building
Fully furnished
Suitable for Scan Centre, Diagnostic Lab, PolyClinic
Contact
9841002876

---

## RENTAL
LAND BUYING, SELLING
All Kind of Building Repair Works Undertaken
Contact B. Rajendran
90809 94500

---

## COMPUTER
*SERVICES*
Laptop, Peripherals through Installation, Sales, Services, Chiplevel, Virus Removal, Networking Solutions to all Hardware & Software
Contact
9841823435
9841823436

---

## BUYING
FURNITURE, ANTIQUES
A TO Z ROSE WOOD
Split A/c, Window A/c
Led & Lcd Tv
Computer, Laptop, Battery, Music System, Hotel Equipments.
Two Wheeler, Four Wheeler
A TO Z
PERUMAL
97105 34483

---

TMS YOGA AND ART'S CENTER
SIMPLE SOLUTION TO LEARN
ONLINE & OFFLINE
Contact
9789098094
8012041624
9500090445
Velachery, Madippakkam, Keelkatalai.

---

Spoken English Class
ஆங்கிலம் கற்க ஆசையா?
Contact
9940354513

---

## Mother Land
*Play School, Day Care & After School Care*
*No.38, 2nd Street, Tansi Nagar, Vijayanagar, (Near ICICI Bank - Royal Shoppee) Velachery, Chennai - 600 042.*
Contact
72992 62185
90947 52300

---

## SERVICES
Plumbing works
Contact
Govindaswamy
87544 09752

---

TUITION CENTRE
@ Velachery
Baby Nagar
*For Students Till 9th Grade of Any Syllabus*
Contact
909 494 7285

---

## Butter Flies
Beauty Parlour & Beauty Training Institute
(Recognised by Tamilnadu Government)
Ladies & Kids Only
Consultant: Beauty tip & women empowerment (adviser)
No:1, MG NAGAR, ATHANUR - 603 202
binduinno@gmail.com
80560 87391
81247 02731

---

CONSULTANT CATERING HOSPITALITY SERVICE
NFC
NIMS FOOD CONSULTANT
E. KAMESH KUMAR IHM-MBA
Office:plot No:4,kumaran nagar, keelkattalai, chennai-600117
Adviser:K.VIJAYA KANCHANA
MSC Food & Nutrition.
email:Nutritionnfc@gmail.com
Mobile:9790 902400
email:Consultantnfc@gmail.com

---

## SHARAN TRAVELS
All kinds of Tourist vehicle available here
Drivers Available
Contact V. Marimuthu
9840508030

---

## SERVICES
Plumbing, Electrical & CCTV Camara Fixing works
Contact P. Balaji
9677409529
9962242015

---

## WOMAN'S WELLNESS YOGA CENTRE
Contact : 9444 122 922
TREATMENTS FOR
- Headache / Migraine
  தலைவலி / ஒற்றை தலைவலி
- Sinusitis
  சைனஸ் தொந்தரவு
- Neck Pain / Cervical Spondylosis
  கழுத்து வலி
- Back Pain / Lumber Spondylosis
  முதுகு வலி
- Digestion Problems & GIT disorders
  வயிறு & குடல் சம்பந்தமான தொந்தரவுகள்
- Uterine ailment like Fibroid
  கர்ப்பப்பை கோளாறுகள்
- PCOD
  மாதவிடாய் கோளாறுகள்
- Respiratory ailments, Asthama
  சுவாச கோளாறுகள்
- Diabetes & is Complications
  சர்க்கரை வியாதிகள்
- Cholastrol, BP
  கொலஸ்ட்ரால், ரத்த கொதிப்பு
- Thyroid Problems
  தைராய்டு பிரச்சனை
- Stress, Anxiety & Sleep Disturbance
  மன அழுத்தம் & தூக்கமின்மை
- Weight Loss & Weight gain
  உடல் எடையை குறைக்க & அதிகரிக்க
- General Health
  பொது மருத்துவம்
- Infertility
  குழந்தையின்மை

---

Commercial Space for Rent
650 Square feet for 23,000/- @ first floor
*Diya Complex, Vijayanagar Main Road, Velachery (Near Ananda Bhavan)*
6 month rent as advance
CONTACT
7305837388

---

## WANTED
LADIES TAILOR
PRASUDRA Boutique
No:2 LAKSHMI NAGAR, 2nd STREET, VELACHERY
*CONTACT - PREMALATHA*
4435504719
8870393999

---

## WANTED
*Tele Callers*
CONTACT
7305837388

---

Commercial Space for Rent
850 Square feet for 27,000/- @ ground floor
*Diya Complex, Vijayanagar Main Road, Velachery (Near Ananda Bhavan)*
2 L as advance
CONTACT
7305837388

---

NISHA YOGA & MEDITATION CENTRE VELACHERY
Online Class for Women and Kids
*FOR ALL AGE CATEGORIES*
*CONTACT*
89391 53560

---

## DESIGNING
Tamil & English DTP designing works
Rs. 750/- only
*Contact*
7305837388

---

LIBRARY FOR CHILDREN
*At 8/3 Vth Cross Street, 13th Main Road, Vijayanagar, Velachery, Chennai - 600 042.*
*Contact*
*9171950340*
*8056103724*

---

To Advertise about Your Business Rental House, Buying, Selling, Services & Job Vacancy Pay Rs. 100/- Only

ஆன்மீக தகவல்

# எந்த ஹோமம் செய்தால் என்ன பிரச்சனை தீரும்...

கணபதி ஹோமம் - தடைகள் நீங்கும்.
சண்டி ஹோமம் - தரித்திரம், பயம் விலகும்.
சுதர்சன ஹோமம் - ஏவல், பில்லி, சூன்யம் நீங்கும், வெற்றி தரும்.
நவக்கிரக ஹோமம் - நவக்கிரக கேடு நீங்கி மகிழ்ச்சி தரும்.
ருத்ர ஹோமம் - ஆயுள் விருத்தி உண்டாகும்.
மிருத்யுஞ்ச ஹோமம் - பிரேத சாபம் நீங்கும்.
புத்திர காமோஷ்டி ஹோமம் - குழந்தை பாக்கியம் உண்டாகும்.
சுயம்வர கலா ஹோமம் - பெண்களுக்கு விரைவில் திருமணம் கைகூடும்.
கந்தர்வ ராஜம் ஹோமம் - ஆண்களுக்கு விரைவில் திருமணம் கைகூடும்.
குபேர ஹோமம் - செல்வ வளம் தரும்.
தில ஹோமம் - இறந்தவர்களின் சாபம் நீங்கும்.
பிரத்யங்கரா ஹோமம் - எதிரிகள் தொல்லை நீங்கும்.
இவைத் தவிர கண் திருஷ்டி ஹோமம், பிரம்மஹத்தி ஹோமம், மகாலட்சுமி ஹோமம் என்று பலப்பல ஹோமங்கள் உண்டு. ஜோதிட ரீதியாக கிரக நிலைகளை ஆராய்ந்து உரிய ஹோமங்களை செய்து வாழ்வில் வளம் பெறலாம்.

# இந்த வார ராசிபலன்



**மேஷம்**
இந்த வாரம் ஆரம்பத்தில் இருந்தே தேவையற்ற பணச் செலவுகளைக் கண்காணிப்பது நல்லது. எனவே தேவைப்படும் நேரத்தில் உங்களுக்கு பணப் பற்றாக்குறை ஏற்படலாம்.



**துலாம்**
இந்த வாரம் உங்கள் ஆரோக்கியம் மிகவும் நல்லது. இந்த நேரத்தில் நீங்கள் ஒவ்வொரு பணியையும் முழு வலிமை -யுடன் செய்ய முயற்சிப்பீர்கள் மற்றும் நல்ல ஆரோக்கியம் கிடைக்கும்.



**ரிஷபம்**
இந்த வாரம் உங்கள் பணியிடத்தில் பல சம்பள உயர்வைக் கொண்டு வருவதற்கான அதிக வாய்ப்புகள் உள்ளன. இதுனால் உங்கள் நிதி நிலைமை பாதிக்காது.



**விருச்சிகம்**
இந்த வாரம் பணியிடத்தில் அதிகமான வேலையால் குடும்ப மகிழ்ச்சியை இழக்க நேரிடும். நீங்கள் மன அழுத்தத் -திலிருந்து விடுபட குடும்பத்துடன் சிறிது நேரம் செலவிடுங்கள்.



**மிதுனம்**
இந்த வாரம் நீங்கள் ஏதேனும் பெரிய நோயால் பாதிக்கப்பட்டிருந்தால், உங்கள் குடும்ப உறுப்பினர்களின் சரியான கவனிப்பால் உங்கள் ஆரோக்கியம் மேம்படும்.



**தனுசு**
இந்த வாரம் உங்கள் குடும்பத்தில் ஒரு பண்டிகை சூழ்நிலை இருக்கும் மற்றும் குடும்பத்தில் அனைவரும் மகிழ்ச்சியாக இருப்பார்கள். உங்கள் முகத்திலும் புன்னகை தோன்றும்.



**கடகம்**
இந்த வாரம் உங்கள் நடத்தை குடும்ப உறுப்பினர்களிடம் நன்றாக இருக்கும், இதன் காரணமாக உங்கள் பெற்றோர் உங்களைப் பார்த்து மிகவும் மகிழ்ச்சி அடைவார்கள்.



**மகரம்**
இந்த வாரம் பணியிடத்தில் சில சாதகமான மாற்றங்களைக் காணலாம். ஏனென்றால், உங்கள் வேலை வெற்றி அடைந்தால், மற்றவர்களின் பாராட்டு -களைப் பெறுவீர்கள்.



**சிம்மம்**
இந்த வாரம் உங்கள் ஆரோக்கியம் வழக்கத்தை விட சற்று சிறப்பாக இருக்கும். ஏனெனில் இந்த நேரத்தில் நீங்கள் மனதளவிலும், உடலளவிலும் மிகவும் ஆரோக்கியமாக இருப்பீர்கள்.



**கும்பம்**
இந்த வாரம் தொடர்ந்து உடற்பயிற்சி செய்வது உங்களை ஆரோக்கியமாக வைத்திருப்பதில் முக்கிய பங்கு வகிக்கும். உங்கள் ஆரோக்கியத்தில் பல நல்ல மாற்றங்கள் காணப்படும்.



**கன்னி**
இந்த வாரம் நீங்கள் நீண்ட கால முதலீடுகளை தவிர்க்க வேண்டும். இதற்கு சிறந்த வழி நீங்கள் உங்கள் நண்பர்களுடன் வெளியே சென்று மகிழ்ச்சியாக இருங்கள்.



**மீனம்**
இந்த வாரம் குடும்ப ஒற்றுமையில் அனைத்து விதமான பிரச்சனைகளை -யும் சமாளித்து வெற்றி பெறுவீர்கள். இதனால் குடும்ப உறுப்பினர்களிடையே சகோதரத்துவம் பெருகும்.

# மெட்ரோ பணிகள் துவக்கம் புழுதிவாக்கத்தில் நெரிசல் அபாயம்...

புழுதிவாக்கத்தில், மெட்ரோ ரயில் இரண்டாம் கட்ட பணிகள் துவங்கியுள்ளதால், போக்கு -வரத்து நெரிசல் அபாயம் ஏற்பட்டுள்ளது.

சென்னையின் போக்குவரத்து நெரிசலுக்கு தீர்வு காண, மெட்ரோ ரயில் இரண்டாம் கட்ட பணிகளுக்கான வேலைகள், பல இடங்களில் நடைபெற்று வருகின்றன. இதில், மாதவரம் - சோழிங்கநல்லூர் வரையிலான வழித்தடமும் ஒன்று. ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டு, சாலைகளை அகலப்படுத்தி, தற்போதைய போக்குவரத்துக்கு எவ்வித இடையூறும் இல்லாமல் செய்த பின்னரே, மெட்ரோ பணிகளைத் துவக்க வேண்டும்.

ஆனால், புழுதிவாக்கம் - மேடவாக்கம் சாலையில், எவ்வித முன்னேற்பாடுகளும் செய்யப்படாமல், மெட்ரோ பணிகளுக்கான வேலைகள் துவக்கப்பட்டுள்ளதால், பெரிய அளவில் போக்குவரத்து நெரிசல் உருவாகும் சூழல் உருவாகி உள்ளது. இது குறித்து புழுதிவாக்கம் பகுதி மக்கள் கூறியதாவது: தினமும் ஆயிரக் -கணக்கான வாகனங்கள் பயணிக்கும் புழுதிவாக்கம் -



மேடவாக்கம் இரு வழிச் சாலையில், ஒரு பக்க சாலையின் அகலம் 20 அடி மட்டுமே. இதில், 5 அடி சாலையை, மெட்ரோ ரயில் பணிகளுக்காக அடைத்து விடுகின்றனர்.

இதனால், "பீக் ஹவர்" நேரங்களில் வாகனங்கள் அனைத்தும் ஊர்ந்தே செல்ல வேண்டியிருக்கும். இதில், மெட்ரோ ரயில் பணிகளுக்காக சாலையின் அகலத்தை குறைப்பதால், கடுமையான போக்குவரத்து நெரிசல் ஏற்படும் அபாயம் உள்ளது. எனவே, சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகள், போக்குவரத்து நெரிசல் ஏற்படாதவாறு, ஆக்கிரமிப்புகளை அகற்றி உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.



## ஜெயகாந்தன் (Jeyakaanthan) பிறந்த தினம் இன்று - ஏப்ரல் 24, 1934

ஜெயகாந்தன் ஏப்ரல் 24, 1934ஆம் ஆண்டு பிறந்தார். இவர் தமிழ் எழுத்தாளர்களில் ஒருவர் ஆவர். இவர் இந்திய அரசின் இலக்கியத்திற்கான உயர்ந்த விருதான ஞான பீட விருதைப் பெற்ற இரண்டாவது தமிழ் எழுத்தாளர். இவருடைய படைப்பிலக்கியக் களம் சிறுகதைகள், புதினங்கள், கட்டுரைகள், திரைப்படங்கள் எனப் பரந்து இருக்கின்றது.

ஜெயகாந்தன் 1934-ஆம் ஆண்டு கடலூர் மாவட்டம் மஞ்சக்குப்பம் என்ற ஊரில், ஒரு வேளாண் குடும்பத்தில் தண்டபாணிப் பிள்ளை, மகாலட்சுமி அம்மாள் ஆகியோருக்கு மகனாகப் பிறந்தார். பள்ளிப்படிப்பில் நாட்டம் இல்லாமையால், ஐந்தாம் வகுப்பிலேயே பள்ளி வாழ்க்கைக்கு முற்றுப் புள்ளி வைத்தார். வீட்டை விட்டு வெளியேறி விழுப்புரம் சென்றார். ஜெயகாந்தன் சில ஆண்டுகள் விழுப்புரத்தில் வாழ்ந்த பின் சென்னைக்குக் குடிபெயர்ந்தார்.

1949-ஆம் ஆண்டு சி. பி. ஐ மீதும் அதன் உறுப்பினர்கள் மீதும் தடை போடப்பட்டது. ஆதலால் சில திங்கள்கள், தஞ்சையில் காலணிகள் விற்கும் கடை ஒன்றில் பணிபுரிந்தார். பின்னர் காமராசருடைய தீவிரத் தொண்டனாக மாறித் தமிழகக் காங்கிரஸ் கட்சியில் சேர்ந்தார். அவரது இலக்கிய வாழ்க்கை 1950களில் தொடங்கியது - சரஸ்வதி, தாமரை, கிராம ஊழியன், ஆனந்த விகடன் போன்ற ஏடுகளில் இவரது படைப்புகள் வெளியாயின. படைப்புகளுக்குப் புகழும் அங்கீகாரமும் கிடைத்தன. இருபதாம் நூற்றாண்டின் தலைசிறந்த தமிழ் எழுத்தாளர்களில் ஒருவராகப் போற்றப் பெற்றார். ஜெயகாந்தன் சில ஆண்டுகள், தமிழ்த் திரையுலகிலும் வலம் வந்தார். இவரது நாவல்களான "உன்னைப் போல் ஒருவன்" மற்றும் "சில நேரங்களில் சில மனிதர்கள்" ஆகியவை படமாக்கப்பட்டன.

## சென்னையில் தங்கம் மற்றும் வெள்ளி விலை நிலவரம்

| | 22 கேரட் | 24 கேரட் |
|---|---|---|
| தங்கம் விலை - | 1 கிராம் ₹ 4,945 | 1 கிராம் ₹ 5,395 |
| | 8 கிராம் ₹ 39,560 | 8 கிராம் ₹ 43,160 |
| வெள்ளி விலை - | 1 கிராம் ₹ 71.60 | |
| | 1 கிலோ ₹ 71,600 | |

ADMISSION OPEN 2022 - 2023

AMET UNIVERSITY
(Deemed to be University Under Section 3 of UGC Act 1956)

ACCREDITED WITH GRADE A NAAC

28 Years

INDIA'S FIRST UNIVERSITY IN MARITIME EDUCATION



SCHOOL OF MANAGEMENT STUDIES
DEPARTMENT OF COMMERCE

B. COM.
(Logistics & Computer Applications)

B. VOC
(BFSI)

Approved by University Grants Commission, Govt of India

EXCELLENT PLACEMENT OPPORTUNITY

(Be a part of Shipping-A Key to Global Economy)



Eligibility : Pass in +2 with 50% marks

- Unique Sector-Specific Programme.
- Accounting, Computer Applications and Logistics Management.
- Specialised subjects handled by Industry Experts.
- 100 percent placement.
- Placement Opportunities in Accounting, Finance, Logistics and IT Sectors.
- Internship Programmes for specialised subjects Real Time Projects.

FEES PER YEAR
RS. 50,000/-
(Paid in three terms)

CALL US TODAY
Toll Free
1800 108 3030

135, East Coast Road, Kanathur
Chennai-603112
admission@ametuniv.ac.in

Visit us at:
www.ametuniv.ac.in

# Chutties Corner

## தனித்திறமை பகுதி





Sai Karthik
I - Std

## HAPPY BIRTHDAY



M. Sai Swarooban
April - 24

படத்தில் உள்ள 10 வித்தியசங்களை கண்டுபிடியுங்கள்...!



Find 10 Differences ?


## வண்ணக்கோலம்





Devika Marimuthu
Thiruvanmiyur

## PAPER CRAFT




## திருக்குறள்



39. வீழ்நாள் படாஅமை நன்றாற்றின் அஃதொருவன்
வாழ்நாள் வழியடைக்கும் கல்

If no day passing idly, good to do each day you toil,
A stone it will be to block the way of future days of moil

உங்கள் வீட்டு குழந்தைகளின் திறமைகளை வெளிப்படுத்த, அவர்களின் ஓவியம், கைத்திறம், கோலம் மற்றும் கவிதைகளை அவர்களின் புகைப்படத்தோடு சேர்த்து வாட்சப் அல்லது மெய்ல் மூலம் எங்களுக்கு அனுப்பி வையுங்கள். இதற்கு கட்டணம் ஏதும் கிடையாது.








தெரிந்துக்கொள்வோம்!

## நடாக்காததையும் நடத்திக்காட்டும் நரசிம்ம மந்திரம்



நீங்கள் ஒரு முயற்சி எடுக்கிறீர்கள் என்னவெல்லாமோ செய்துபார்க்கிறீர்கள் ஆனால் ஏதோ தடங்கள் இடைஞ்சல் என்று தலை தூக்கி அந்த முயற்சி நிறைவேறாமல் போய் விட்டது. நீங்கள் மனவருத்ததுடன் இருக்கிறீர்கள் அப்படியானால் நீங்கள் சொல்ல வேண்டிய மந்திரம் இதுதான். இந்த மந்திரம் நடாக்காததையும் நடத்திக்காட்டும் தன்மையுடையது.

யஸ்ப அபவத் பக்தஜன ஆர்த்திஹ்ந்து
பித்ருத்வம் அந்யேஷு அவீசார்ய தூர்ணம்
ஸ்தம்பே அவதார தம் அநந்ய லப்யம்
லக்ஷ்மி ந்ருஸிம்ஹம் சரணம் பிரபத்யே.

இந்த ஸ்லோகத்தைச் சொல்ல முடியாதவர்கள் பொருளைச் சொல்லுங்கள்.

“பக்தியற்றவர்களால் அடைய முடியாதவனே!! தாயின் கர்பத்தில் அவதரித்தால் தாமதமாகுமென்று தூணில் அவதரித்தவனே!! நினைத்த மாத்திரக்கில் பக்தர்களின் துன்பத்தைப் போக்குபவனே!! லக்ஷ்மி நரசிம்மனே!! உனது திருவடியைச் சரணடைகிறேன்.

# தரமணி-பெருங்குடி சாலையோரம் குப்பை கழிவுகள்...



தரமணி-வேளச்சேரி இடையே போக்குவரத்து நெரிசலை தீர்ப்பதற்காக, மேம்பால ரயில் நிலையத்தை ஒட்டி இணைப்பு சாலை அமைக்கப்பட்டது. பல ஆண்டுகளாக இச்சாலை பணியை கிடப்பில் போட்டதால், போக்குவரத்து குறைவாக இருந்த காலத்தில் சாலையோரம் குப்பைகள் கொட்டப்பட்டு வந்தன.

தற்போது, சாலைப்பணி முடித்து போக்குவரத்திற்கு திறக்கப்பட்டுள்ளது. தினசரி ஏராளமான இரு, நான்கு சக்கர வாகனங்கள் சென்று வருகின்றன. சாலையோரம் கொட்டப்படும் குப்பை கழிவுகளால், அப்பகுதி முழுவதும் துர்நாற்றம் வீசி வருகிறது. இரவு நேரத்தில் லாரிகள் மூலம் கழிவு நீரும் கொட்டப்படுகிறது.

எனவே சம்பந்தப்பட்ட மாநகராட்சியினர் சாலையோரம் உள்ள குப்பையை முழுமையாக அகற்ற வேண்டும். கழிவுநீர் கொட்டாத வகையில் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.



## இயற்கை அழகு குறிப்பு

❖ நாட்டுக் கோழி முட்டையின் வெள்ளைக் கருவுடன் சிறிதளவு நல்லெண்ணெய் சேர்த்து பருக்களின் மீது தடவினால் பரு குணமாகும்.

❖ திராட்சைப் பழத்தை சிறிதளவு எடுத்து முகத்தில் தேய்த்து சிறிது நேரம் கழித்து கழுவினால் முகம் பளபளப்பாக இருக்கும்.

❖ தக்காளியை முகத்தில் நன்கு தேய்த்து ஒரு மணிநேரம் கழித்து கழுவினால் முகம் பொலிவு பெறும்.

❖ ஆப்பிள் பழத்தை தோல் நீக்கி அரைத்து அதனுடன் தேன் கலந்து முகத்தில் தடவி நன்கு ஊறிய பிறகு குளித்தால் முகச் சுருக்கம், பருக்கள் போன்றவை ஏற்படாது. மேலும் முகம் பொலிவு பெறும்.

❖ பிழிந்த எலுமிச்சம் பழத்தோலை மோர் அல்லது தயிருடன் சேர்த்து முகத்தில் நன்கு தேய்த்துக் கழுவினால் முகம் பளபளப்பாக இருக்கும்.

# சாலையை ஆக்கிரமிக்கும் குழாய்களால் பொதுமக்கள் அவதி...

சென்னை மாநகராட்சியின் அடையாறு மண்டலம், திருவான்-மியூர் காமராஜர் சாலை போக்குவரத்து நிறைந்தது. கிழக்கு கடற்கரை சாலையில் இருந்து, ராஜிவ்காந்தி சாலை, தரமணி, வேளச்சேரி செல்லும் இருசக்கர வாகனங்கள் மற்றும் நான்கு சக்கர வாகனங்கள் அதிகம் பயணிக்கின்றன. மாநகர பேருந்துகளும் இதில் சென்று வருகின்றன. இச்சாலையின் ஓரம், பல மாதங்களாக குடிநீர் வாரியத்தின் சார்பில், குழாய்கள் போட்டு வைக்கப்பட்டுள்ளன. இதனால், வாகன ஓட்டிகள், பாதசாரிகள் அவதிக்குள்ளா-கின்றனர். சமீப காலமாக விஷ ஜந்துக்களின் புகழிடமாகவும், இரவு நேரத்தில் “குடி”மகன்களின் பாராகவும் மாறி வருகிறது. எனவே, சம்பந்தப்பட்ட துறை-யினர், அங்குள்ள குழாய்களை அகற்ற உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை எழுந்துள்ளது.

# பெருங்குடி குப்பை கிடங்கில் மாநகராட்சி மேயர் ஆய்வு...



பெருங்குடி குப்பை கிடங்கில் செயல்படும், "பயோ மைனிங்" பணியை 19ஆம் தேதி அன்று மேயர் பிரியா பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

சென்னை மாநகராட்சியில் சேகரமாகும் குப்பைகள், மக்கும், மக்காத குப்பைகளாக தரம் பிரிக்கப்பட்டு, மறுசுழற்சி செய்யும் வகையில் பதனிடும் மையங்களுக்கு அனுப்பப்படுகிறன்றன. மீதமுள்ள கழிவுகள் பெருங்குடி கிடங்கில் கொட்டப்படுகிறது. அக்கிடங்கு, 225 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ளது.

இதில், நீண்ட நாட்களாக கொட்டப்படும் குப்பை, 34.02 லட்சம் கன மீட்டர் அளவில் உள்ளது. அவை, "பயோ மைனிங்" முறையில் களையப்பட்டு, அவற்றில் இருந்து கல், மணல், இரும்பு, கண்ணாடி, ரப்பர், பிளாஸ்டிக் தனித்தனியாக பிரித்து மறுசுழற்சி செய்யப்படுகிறது.

இந்த பணி, 351 கோடி ரூபாய் மதிப்பில் 11 மையங்கள் வாயிலாக செயல்பட்டு வருகிறது. இத்திட்டப் பணிகளை சென்னை மாநகராட்சி மேயர் பிரியா 19ஆம் தேதி அன்று ஆய்வு செய்தார். மேலும், உரிய காலத்திற்குள் முடிக்க ஒப்பந்ததாரர் -களுக்கு அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வின்போது, சுகாதார பிரிவு துணைக் கமிஷனர் மனிஷ், திடக்கழிவு மேலாண்மை தலைமைப் பொறியாளர் மகேசன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

# இருளர் இளைஞர்களுக்கு பயிற்சி கிண்டி சிறுவர் பூங்காவில் ஏற்பாடு...



சென்னை : படித்த இருளர் பழங்குடியினர் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் வகையில், பாம்பு பிடி மற்றும் மருத்துவ தாவரங்களை அடையாளம் காணும் பயிற்சி, கிண்டி பாம்பு பண்ணையில் வழங்கப்படுகிறது.

சென்னை, கிண்டி சிறுவர் பூங்கா வளாகத்தில் உள்ள பாம்பு பண்ணையில், 12 வகையான 30க்கும் மேற்பட்ட பாம்புகள், 50 ஆமைகள், 50 முதலைகள், பச்சோந்தி உள்ளிட்ட உயிரினங்கள் உள்ளன. பாம்பு கடி இறப்பு மற்றும் பாம்பை அடித்து கொல்லுவதை தடுக்கும் வகையில், வனவிலங்கு பாதுகாப்பு, இருளர் பழங்குடியினர் மேம்பாடு மற்றும் பாம்பு கடி சிகிச்சை மேம்பாடு திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

இத்திட்டத்தை, இந்தியன் ஆயில் கார்ப்பரேஷனுடன் இணைந்து செய்கிறது. இத்திட்டத்தின் ஒரு பகுதியாக, கிண்டி பாம்பு பண்ணையில், படித்து வேலை தேடி கொண்டிருக்கும், 10 இருளர் பழங்குடியின இளைஞர்களுக்கு, திறன் மேம்பாட்டு பயிற்சி வழங்கப்படுகிறது. பாம்பு பிடிப்பது, சிகிச்சை முறைகள், மருத்துவ தாவரங்களை அடையாளம் காண்பது, அதன் பயன்பாடு உள்ளிட்ட பயிற்சிகள் 50 நாட்கள் வழங்கப்படுகின்றன.

இது குறித்து, கிண்டி பாம்பு பண்ணை அறக்கட்டளை செயல் தலைவர் பால்ராஜ் கூறியதாவது: வன விலங்கு பாதுகாப்பு, இருளர் பழங்குடியினர் மேம்பாடு திட்டத்தில், செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர் மாவட்டங்களில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களில், பாம்பு கடி மருந்து வழங்க உள்ளோம். விலங்குகள் வேட்டையாடுவதை தடை செய்ததால், இருளர் பழங்குடியினர் மக்கள் வேறு தொழிலுக்கு செல்கின்றனர்.

இதில், படித்த இளைஞர்களின் நலன் கருதி, பாம்பு பிடி பயிற்சி, மருத்துவ தாவரங்களை அடையாளம் காண்பது, அதன் பயன்கள் குறித்து மூத்த இருளர் மக்கள் மற்றும் வனத்துறை அதிகாரிகளை கொண்டு பயிற்சி அளிக்கிறோம். இதன் மூலம், விலங்குகள் சரணாலயம், தாவர ஆராய்ச்சி மையம், வனத்துறை மீட்பு குழவில் வேலைவாய்ப்பு கிடைக்கும். சுற்றுலா பயணியருக்கு வழிகாட்டியாகவும் இருக்க முடியும். இவ்வாறு அவர் கூறினார்.


## யோகாசனம்

### மச்சாசனம் (மீன் உடற்கோணம்)



பயன்கள்:

- இது மூளைக்குச் செல்லும் இரத்த ஓட்டத்தை மேம்படுத்துகிறது.
- இது தைராய்டு சுரப்பியின் செயலைச் சீர்படுத்தி நோயிலிருந்து பதுகாப்பைப் பெருக்குகிறது.
- இது முதுகுவலியையும் கழுத்தெலும்புத் தேய்மானத்தையும் நிவர்த்தி செய்கிறது.
- இது கால்களின் இரத்த ஓட்டத்தை இடுப்புப் பகுதிக்கு மடைமாற்றம் செய்து வயிற்றுத் தசைகளை வலுவாக்குகிறது.
- இது நுரையீரல் மற்றும் மூச்சுக் கோளாறுகளுக்கு நன்மை பயக்கிறது.



அருட்பெருஞ்ஜோதி தனிபெருங்கருணை

YOGA CENTRE

Cell : 9444 122 922


# வேளச்சேரி விரைவு சாலையில், குடிநீர் லாரிகளால் விபத்து அபாயம்...

வேளச்சேரி விரைவு சாலையில், குடிநீர் கீழ்நிலை நீர்தேக்க தொட்டி உள்ளது. இங்கிருந்து, வேளச்சேரி சுற்று வட்டார பகுதிகளுக்கு, குழாய் வழியாக குடிநீர் வினியோகம் செய்யப்படுகிறது.

இதுபோக, லாரியிலும் குடிநீர் நிரப்பி வினியோகிக்கப் -படுகிறது. விரைவு சாலையில், பின்னால் வரும் வாகனங்களை கண்டுகொள்ளாமல், குடிநீர் லாரிகள் இயக்கப்படுகின்றன. திடீரென, பிரேக் பிடித்து லாரியை திருப்புவதால், சாதாரணமாக செல்லும் வாகனங்களும் மோதி விபத்தில் சிக்குகின்றன.

சில நேரம், 10க்கும் மேற்பட்ட லாரிகள் வரிசை கட்டி நிற்பதால், விரைவு சாலையில் போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது. விபத்து ஏற்படாமல் தடுக்க, லாரிகளை முறையாக இயக்க, குடிநீர் வாரிய அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

# பெயர் பலகையில் சுவரொட்டி: மாநகராட்சி அதிரடி...

"சென்னையில் தெரு பலகைகளில் சுவரொட்டிகள் மற்றும் விளம்பரங்கள் ஒட்டும் நபர்கள், நிறுவனங்கள் மீது குற்றவியல் நடவடிக்கை எடுக்கப்படும்" என, மாநகராட்சி எச்சரித்துள்ளது.

இது குறித்து, சென்னை மாநகராட்சி வெளியிட்டு உள்ள செய்தி குறிப்பு: சென்னை மாநகராட்சி சார்பில், அனைத்து தெருக்கள் மற்றும் சாலைகளிலும், பெயர் பலகைகள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள தெருக்களின் பெயர் பலகைகள், இனி அமைக்கப்பட உள்ள பெயர் பலகைகளில் சுவரொட்டிகள் ஒட்டும் நபர்கள் மற்றும் நிறுவனங்களின் மீது, தமிழ்நாடு திறந்தவெளி இடங்கள் பாதுகாப்பு சட்டம் 1959ன்படி நடவடிக்கை எடுக்கப்படும்."


குறிப்பாக, காவல் நிலையங்களில் புகார் அளித்து, சிறை தண்டனை மற்றும் அபராதம் விதிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். எனவே, பொதுமக்கள் மாநகராட்சியின்



இந்த நடிவடிக்கைகளுக்கு தங்களின் முழு ஒத்துழைப்பை வழங்கி, பொது இடங்கள் மற்றும் தெருக்களின் பெயர் பலகைகளில் சுவரொட்டிகள் மற்றும் விளம்பரங்களை செய்வதை தவிர்க்க வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

### சென்னையில் பெட்ரோல், டீசல் விலை நிலவரம்






| பெட்ரோல் விலை | டீசல் விலை |
|---|---|
| விலை 1 லிட்டர் | விலை 1 லிட்டர் |
| ₹ 110.85 | ₹ 100.94 |

# Entertainment Corner

## குறுக்கெழுத்துப் புதிர்



**இடமிருந்து வலம்:**

1. ரஷ்ய புரட்சியை தலைமை ஏற்று நடத்தியவரின் முழுப்பெயர்
3. திரைப்படத்தில் இதுதான் அவசியம்
6. கவிதை ___ சுருக்கமாக இப்படியும் அழைக்கலாம்
9. பந்தியில் இதனைப் பயன்படுத்துவார்கள்
13. காணிக்கை வேறு சொல்
15. பருப்பு என்பதை குழந்தைகள் இப்படித்தான் சொல்வார்கள்

**வலமிருந்து இடம்:**

8. சுவர் வேறு சொல்
10. காதலர் தினம் திரைப்படத்தின் இயக்குனர்
12. தொடர்ச்சியாக ஒரு பத்திரிக்கையைப் படிப்பவன்
17. குற்றாலத்தில் மொத்தம் ஒன்பது _____ உள்ளன?
20. அகன்ற வாயை உடைய, உயரக் குறைவான மண் பாத்திரம்

**மேலிருந்து கீழ்:**

1. ரம்யா பாண்டியன் நடித்த தமிழ் படம்
2. விரைவில் துரு பிடிக்காத உலோகங்களில் ஒன்று
4. திருமணம் வேறு சொல்
7. இதை மதியால் வென்று விடலாம்
10. ஒரு வகை சுவை
12. முன்னாள் பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் தலைவர்
20. ஆம் என்பதன் வேறு சொல்

**கீழிருந்து மேல்**

5. பிணம் வேறு சொல்
14. பரமசிவனின் துணைவியார்
16. சந்தோஷ் நாராயணன் இசையமைத்த திரைப்படங்களில் ஒன்று
18. இயற்கை போதைப் பானம்
19. மிஸ்டர் சந்திரமௌலி என்ற தமிழ் படத்தின் இயக்குனர்

உங்களின் திறமைகளை வெளிப்படுத்த, உங்கள் ஓவியம், கைத்திறம், கோலம் மற்றும் கவிதைகளை உங்களின் புகைப்படத்தோடு சேர்த்து வாட்சப் அல்லது மெயில் மூலம் எங்களுக்கு அனுப்பி வையுங்கள். இதற்கு கட்டணம் ஏதும் கிடையாது.


| | |
|---|---|
| Publisher | : R. Rajesh |
| Editor | : Saranya Rajesh |
| Designer | : S. Aswini |
| Journalist | : P. Praveen |
| Marketing Executive | : C. Karthikeyan |

இது எங்களுடைய ஒரே பத்திரிக்கை நிறுவனம்
This is our only concern

Express Velachery
Weekly - News Paper
37F, Diya Complex
Velachery Main Road, Vijayanagar,
Velachery, Chennai - 600042.
Timing: Monday to Friday 9.30 am to 6.00 pm
Saturday 9.30 am to 12.30 pm
044-42077328 / 7305837388
E-mail : expressvelachery@gmail.com



**DISCLAIMER**

Readers are advised to make appropriate enquiries while responding to advertisements in these columns. Express Velachery does not vouch for any claims made by the Advertisers. The Printers, Publishers, Editor and Owners of Express Velachery shall not be held responsible/ liable for any consequences, in case such claims are found to be false.


## எக்ஸ்பிரஸ் ஜோக்ஸ்.........



சன்யாசிக்கும் சம்சாரிக்கும் என்ன வித்தியாசம்?
புலித்தோலில் தூங்குபவர் சன்யாசி...
புலியுடனேயே தூங்குபவர் சம்சாரி...

******

Daddy.... இந்த அப்ளிகேஷன்லே,
"மதர் டங்க்" குன்னு இருக்கு... என்ன எழுத..??
ரொம்ப நீளம்னு எழுது...

******

மழை, மனைவி - இரண்டிற்கும் என்ன ஒற்றுமை?
ரெண்டுமே இல்லாதப்போ எப்ப வரும்ன்னு ஏங்குவோம்...
வந்தா ஏண்டா வந்ததுதுன்னு புலம்புவோம்...

******

## சொல் விளையாட்டு

______________ ______________
______________ ______________
______________ ______________
______________ ______________
______________ ______________

| | | |
|---|---|---|
| அ | சி | ங் |
| க | ம் | லை |
| வி | ன | டி |

கட்டத்தில் உள்ள எழுத்துக்களில் 10 வார்த்தைகளை கண்டுபிடியுங்கள்.

## விடுகதை விளையாட்டு

1. பேசுவான் நடக்கமாட்டான் பாடுவான் ஆடமாட்டான். - அவன் யார்?
2. சங்கீதம் பாடும் சல்லாபம் செய்யும் சமயத்தில் ரத்தம் குடிக்கும் - அது என்ன?
3. நான்தான் சகலமும். என்னைப் பார்க்க முடியாது, பிடிக்கவும் முடியாது. எனக்கு வாயில்லை, ஆனால் நான் ஓசை எழுப்புவேன் - நான் யார்?
4. கோயிலுக்குப் போனானாம் எங்க தம்பி தீர்த்தம் விட்டானாம் தங்கத் தம்பி -அது என்ன?
5. தலையில் கிரீடம் வைத்த தங்கப்பழம் - அது என்ன?

### சென்ற வார விடுகதை விளையாட்டிற்கான விடைகள்

**1. சோளப்பொத்தி 2. பஞ்சு 3. சட்டை 4. கரும்பு 5. ஒட்டகம்**

### இணைச் சொற்களை கண்டுபிடியுங்கள்

**உடுக்கை**

________ ________ ________ ________

| | | |
|---|---|---|
| உடை | நூல் | பட்டு |
| துணி | ஆடை | உடுப்பு |

### சென்ற வார சொல் விளையாட்டிற்கான விடைகள்

**1. நீலம் 2. நீலத்திமிங்கலம் 3. கலம் 4. சலம் 5. திலகம் 6. சங்கம் 7. கத்தி 8. கலகம் 9. கலசம் 10. சகதி**

**அறுசுவை சமையல்**

## பப்பாளி கூட்டு

தேவையான பொருட்கள்:

பழுக்காத பப்பாளி - 1 (தோலுரித்து துண்டுகளாக்கப்பட்டது)
கடலைப்பருப்பு - 3/4 கப்
மஞ்சள் தூள் - 1 டீஸ்பூன்
உப்பு - தேவையான அளவு
தேங்காய் - 3/4 கப்
சீரகப் பொடி - 1 டீஸ்பூன்
வரமிளகாய் - 3
எண்ணெய் - 1 டேபிள் ஸ்பூன்
கடுகு - 1 டீஸ்பூன்
உளுத்தம் பருப்பு - 1 டீஸ்பூன்
கறிவேப்பிலை - சிறிது

செய்முறை:

❖ முதலில் கடலைப்பருப்பை நீரில் 15 நிமிடம் ஊற வைத்துக் கொள்ளவும்.

❖ பின்னர் ஒரு வாணலியை அடுப்பில் வைத்து, அதில் தண்ணீர் ஊற்றி, கடலைப்பருப்பை கழுவிப் போட்டு, 15-20 நிமிடம் மிதமான தீயில் வேக வைக்க வேண்டும். கடலைப்பருப்பு ஓரளவு வெந்ததும், அதில் பப்பாளியை சேர்த்து மூடி வைத்து 15 நிமிடம் வேக வைக்க வேண்டும்.

❖ அடுத்து அதில் மஞ்சள் தூள் மற்றும் உப்பு சேர்த்து கிளறி விட வேண்டும். பின் மிக்ஸியில் அரைப்பதற்கு கொடுத்துள்ள பொருட்களை சேர்த்து, சிறிது தண்ணீர் ஊற்றி அரைத்து பேஸ்ட் செய்து, பப்பாளியுடன் சேர்த்து நன்கு பிரட்டி, 5-8 நிமிடம் நன்கு வேக வைக்க வேண்டும்.

❖ அதற்குள் மற்றொரு அடுப்பில் சிறு வாணலியை வைத்து, அதில் எண்ணெய் ஊற்றி காய்ந்ததும், தாளிப்பதற்கு கொடுத்துள்ள பொருட்களை சேர்த்து தாளித்து பப்பாளி கலவையுடன் சேர்த்து கலந்து இறக்கினால், சுவையான பப்பாளி கூட்டு ரெடி.

## அறிவியல் தகவல்

### திமிங்கலத்தால் மிச்சமாகும் விமான எரிபொருள்

மின்சாரம் அல்லது ஹைட்ரஜனால் இயங்கும் விமானங்கள் வந்தால் தான், மாசில்லாத வான் பயணம் சாத்தியமாகும். அதுவரை, மாசுபாட்டை குறைக்கும் வழிகளைத்தான் நாடியாக வேண்டும். லுப்தான்சாவும், பி.ஏ.எஸ்.எப்பும் இணைந்து செய்துள்ள எளிய சோதனை, நல்ல பலனைத் தந்துள்ளது. வழக்கமான விமானத்தின் மேற்பரப்பில், ''ஏரோஷார்க்'' என்ற ஒரு படலத்தை ஒட்டினர் ஆராய்ச்சியாளர்கள். இதன் பலனாக, விமானத்தின் எரிபொருள் பயன்பாடு குறைந்தது. இதனால், விமானம் வெளியேற்றும் மாசுபாடும் குறைந்தது. இந்த வான்வெளிக் கண்டுபிடிப்பிற்கு உந்துதலாக இருந்தது, கடல் வாழ் உயிரினமான திமிங்கலம்தான்.

கடலுயிர்களில் பெரியதான சுறா, வேகமாக நீந்துவதற்கு, அதன் உருவம் ஒரு தடையாக இருக்கக்கூடாது என, இயற்கை படைத்த விந்தை தான் அதன் தோல். பார்க்க மிக சமதளம் போலத் தோன்றினாலும், சுறா தோல் முழுதும் மிகமிக நுண்ணிய செதில் போன்ற நீட்சிகளை கொண்டு இருக்கும். இந்த நீட்சிகள், சுறா நீந்துவதற்குத் தடையாகத் தானே இருக்க வேண்டும்? இல்லை. ஒவ்வொரு நீட்சியும் நீரைக் கிழிக்கப்பயன்படுவதால், அத்தனை பெரிய உடல் கொண்ட சுறாவால், மிக வேகமாக நீந்த முடிகிறது.

நீரியங்கியலில் எது பயன்படுகிறதோ, அது காற்றியங்கியலிலும் பயன்படும். எனவே, லுப்தான்சாவின் ஆராய்ச்சியாளர்கள், சுறா தோல் போன்ற நுண் செதில் நீட்சிகளைக் கொண்ட ஸ்டிக்கர் போன்ற படலத்தை உருவாக்கினர். அதற்கு பொருத்தமாக ''ஏரோஷார்க்'' என்ற பெயரையும் சூட்டினர்.

இந்தப் படலத்தை எந்த விமானத்தின் மீதும் ஒட்டலாம். அது, எதிர்க் காற்றுத் தடையைக் கிழித்துச் செல்ல உதவும். இதனால் லுப்தான்சா, தன்னிடமுள்ள 10 ''போயிங் 777'' விமானங்களில், ''ஏரோஷார்க்'' படலத்தை ஒட்டியது. இதனால், ஆண்டுக்கு 3.7 ஆயிரம் டன் ஜெட் எரிபொருளை மிச்சம் செய்ய முடியும். மேலும், 11.7 ஆயிரம் டன் கார்பன்டையாக்சைடு மாசினை காற்றில் கலக்காமல் தடுக்க முடியும்.


ஏரோஷார்க்கின் பயனை ஸ்விஸ் ஏர் விமான நிறுவனமும் தனது எல்லா போயிங் 777 விமானங்களிலும் ஒட்டி ஓட்டுகிறது. ஏரோஷார்க் ஆராய்ச்சியாளர்களின் கருத்துப்படி, பயணிகள் விமானத்தைவிட, சரக்கு விமானத்தில் இந்தப் படலத்தை ஒட்டினால் பலன் கூடுதலாக இருக்கும். ஏன் தெரியுமா? சரக்கு விமானங்களில் சன்னல்களே இருக்காது. எனவே அந்தப் பகுதியிலும் ஏரோஷார்க்கை ஒட்டினால், எரிபொருள் மிச்சமாகும்.




























Owned & Published R.Rajesh, No.17, 100ft, By Pass Road, Velachery, Ch-42. Printed by S.Ali Mohammed Sayeed, Mo.22/49, Subedar Hussain Street, Border Thottam, Royapettah, Ch-14. Editor: SARANYA RAJESH